திங்கள்கிழமை
25 ஜூன் 2018

# ஸ்ரீசாரதா மகளிர் கல்லூரியில் புத்தாக்கப் பயிற்சி முகாம்

**திருநெல்வேலி, ஜூன் 24:** பாளையங்கோட்டையில் ஸ்ரீசாரதா மகளிர் கல்லூரியில் மாணவிகளுக்கான புத்தாக்கப் பயிற்சி முகாம் 2 தினங்கள் நடைபெற்றது.

இம்முகாமிற்கு, கல்லூரிச் செயலர் யதீஸ்வரி சரவணபவ பிரியா தலைமை வகித்து தொடங்கி வைத்தார். முதல்வர் எம். மலர்விழி, போட்டித் தேர்வை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்து பேசினார். முகாமையொட்டி, மாணவிகளுக்கு தன்முனைப்புத் திறனை மேம்படுத்துதல் குறித்து பல்வேறு துறை சார்ந்த பேராசிரியர்கள் பயிற்சி அளித்தனர். இதில், இளங்கலை 2 ஆம் ஆண்டு, இறுதியாண்டு மற்றும் முதுகலைப் பிரிவு மாணவிகள் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை கல்லூரி தொழில்நுட்பத்துறைத் தலைவர் மு. இந்திரா, பேராசிரியைகள் கி. அமுதாசெல்வி, மிருணாதேவி, ராஜேஸ்வரி, தி. கானசரஸ்வதி ஆகியோர் செய்தனர்.